[2013 மே 10

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் இரயில் நிலையம் அருகில், கடவு எண் 4–க்கு மாற்றாக ரூ.19.97 கோடி செலவில் சாலை கீழ்ப்பாலம் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அமைக்கப்படவுள்ள கீழ்ப்பாலத்தின் இரயில்வே பகுதியின் பணி இரயில்வே துறையினரால் ரூ.9.68 கோடி மதிப்பில் செயல்படுத்துவதற்கு 9–1–2013 அன்று அங்கீகாரம் வழங்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரயில்வே பணிகள் முடிந்தவுடன் அணுகுசாலை அமைப்பதற்கான பணி நெடுஞ்சாலைத் துறை மூலமாகத் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.*

திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் கனிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 461, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

461—

பால் பண்ணைக்குப் புதிய கட்டடம்

***8823—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலுள்ள பால் பண்ணைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 மே 10]

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி ஆவின் பால் பண்ணை நிறுவனத்திற்கு நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கையாளும் திறனுள்ள பால் பதன ஆலை ஒன்று காரைக்குடி, கழனிவாசலில் 1986 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது இப்பால் பண்ணையில் நாளொன்றுக்கு சராசரியாக 31,000 லிட்டர் பால் கையாளப்பட்டு வருகிறது. இவ்வொன்றியத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படும் அனைத்துப் பாலையும் குளிர்விக்கும் அளவிற்கு இந்த ஆலையின் திறன் உள்ளது. காரைக்குடி ஒன்றியத்தில் பால் கொள்முதல் அதிகரித்து, ஆலையில் கையாளும் திறன் உயர்த்தப்பட வேண்டுமென்ற நிலை வரும்போது, பால் பண்ணைக்குக் கூடுதல் கட்டடம் தேவை இருப்பின், பரிசீலனை செய்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று காரைக்குடி பால் பண்ணைக்குக் கூடுதலாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏடு தந்து, எழுத்து தந்து, எழுதுகோல் முதல் எண்ணற்றவை தந்து, ஆடை தந்து, அட்லஸ் தந்து, ஆண்டு முழுவதும் உணவு தந்து, பாடம் தந்து, படிப்பு தந்து, மிதியடி முதல் மிதிவண்டி வரை அனைத்தும் தந்து, கல்வி தந்து, அம்மாவின் கனிவைத் தந்து, காலம் போற்றும் மாற்றம் தந்து, புரட்சிக்குப் புது வடிவம் தந்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு ஆண்டுகள் தேர்வில் மாணவர்களின் வெற்றியோ 88 சதவிகிதம், இரண்டு ஆண்டு கால ஆட்சியில் அம்மாவின் வெற்றியோ 100 சதவிகிதம், பள்ளிக் கணக்கில் 2,352 மாணவர்கள் 100 சதவிகிதம், அரசியல் கணக்கில் அம்மா ஒருவரே 100 சதவிகிதம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியில், மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1986 ஆம் ஆண்டு இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்தை உள்ளடக்கிய பால் நிறுவனம், பால் பண்ணை துவங்கப்பட்டன. அங்கே துவங்கப்பட்டு, இன்றைக்கு நல்ல நிலைமையிலே 43,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையில், 27 ஆயிரம் லிட்டர் உள்ளூரிலே, காரைக்குடி நகரத்திலே விற்பனையும் செய்யப்படுகிறது. அந்தப் பால் நிறுவனம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் பொதுவாகக் கட்டப்பட்ட கட்டடத்தில், இயங்கி வருகிறது. அங்கு இடம் பற்றாக்குறையாக இருந்து வருகிறது. இப்பொழுது, நிருவாகப் பிரிவிற்கும், பொது மேலாளர், தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயரதிகாரிகள் அறைகள், கூட்ட அறைகள் மற்றும் பால் உபயோகப் பொருட்கள் வைப்பதற்கும், வாகன நிறுத்துமிடம் போன்றவை இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, இங்கே, புதிதாகக் கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, காரைக்குடி ஒன்றியத்தில், பால் கொள்முதல் அதிகரிக்கும் நிலையிலும், அதேபோன்று, அங்கே புதிய கட்டடம் தேவை இருப்பின் பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

முற்பகல் 10—40

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி ஆவின் நிறுவனத்திற்கு துணைப் பதிவாளர்

2013 மே 10]

அலுவலகம், மானாமதுரையில் இயங்கி வருகிறது. இதை காரைக்குடி ஆவின் நிறுவனத்துடன் இணைத்தால் அது நிருவாகத்திற்கு ஒத்துழைப்பாக இருக்கும். ஆகவே, இதையும் இணைக்கக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நல்ல நிலைமையிலே செஞ்சி பகுதியில் இயங்கிவந்த ஆவின் பால் நிறுவன கட்டடம் இப்பொழுது இடிந்த நிலையில் மூடப்பட்டிருக்கிறது. ஆவின் நிறுவனத்திற்கு 50 சென்ட் இடமும் இருக்கிறது. அங்கே புதிய கட்டடத்தைத் தந்து, மீண்டும் அந்த பால் உற்பத்தி நிலையம் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற D.R. Office மானாமதுரையில் ஆரம்பம் முதலே செயல்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து ஒரே D.R. Office என்பதால் இரண்டு மாவட்டங்களுக்கும் நடுவில் மானாமதுரையில் செயல்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டம் தனியாக உருவான பின்னர், ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு D.R. Office மாற்றம் செய்ய கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக D.R. Office அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில், தற்போது திருப்பூர் மாவட்டத்திற்குத் தனியாக ஒரு D.R. Office அமைக்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், D.R. Office அமைப்பது குறித்து பரிசீலனை செய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இயங்கி வந்த அந்தப் பால் விற்பனைச் சங்கம், காரைக்குடி ஆவின் நிறுவனத்துடன் சேர்க்கப்பட்டு, அந்தச் சங்கத்தில் பணியாற்றிய பணியாளர்கள் அனைவரும் காரைக்குடி

ஆவின் நிறுவனத்தில் பணியாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடம் ஆரம்ப காலத்தில் வாடகைக்கு விடப்பட்டு, தற்போது அங்கே நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்த இடத்திற்கு அருகில் ஏற்கெனவே ஒரு ஆவின் பாலகம் இருப்பதால், அந்தக் கட்டடத்தில் ஆவின் பாலகம் அமைக்கத் தேவையில்லை. மேலும் அந்தக் கட்டடத்திற்கு அருகில் கால்வாய் ஓடுவதால் கட்டடத்தைப் புதுப்பித்து பயன்படுத்த முடியாமல் உள்ளது. ஆகையால் அந்தக் கட்டடம் தேவையிருப்பின் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 462, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

462—

தூர் வாருதல்

***19605—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணையைத் தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வைகை அணையைத் தூர் வார அரசு முன்வருமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், வைகை அணையைத் தூர் வாருவதற்கு விருப்ப வெளிப்பாடு, அதாவது Expression of Interest 11 நிறுவனங்களிடமிருந்து 26–9–2012 அன்று பெறப்பட்டது. 7–12–2012 அன்று முதன்மை தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதாரத் துறை) அவர்களின் தலைமையில் நடைபெற்ற தொழில்நுட்பக் குழுவின் அறிவுரைப்படி, வைகை அணை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மணல் படிமானங்கள் பற்றிய ஆய்வுகள்